ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/49 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06

*2261/49 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

L.D.B 3/2013 (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில்,
அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

1A - G 35888 — 510 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்க்காப்புக்கான சர்வதேச சமவாயத்தின் I ஆம் அத்தியாயத்துக்கும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்துக்கும் மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்குச் செய்யப்படும் ஏதேனும் அடுத்துபின்னரான திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

**பாகம் I**

**இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடைமை**

2. (1) இவ்வொங்கு விதியின் (2) ஆம், (3) ஆம் உப ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையனவும் சர்வதேச பயணங்களில் ஈடுபட்டுள்ளனவுமான கப்பல்களுக்கும் மற்றும் இலங்கை நீர்ப்பரப்புகளிலுள்ள வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) (இல்வொழுங்குவிதிகளில் ''சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்திலும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்திலும் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்கப்பல்களுக்கும் ;

(அ) 500 முழு மொத்தத் சரக்கெடைக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும் ;

(இ) பொறிமுறை வழிவகைகள் மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும் ;

(ஈ) பழமைவாய்ந்த கட்டுக்கோப்பைக் கொண்ட மரக்கப்பல்களுக்கும் ;

(உ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத களியாட்டப் படகுகளுக்கும் ; அத்துடன்

(ஊ) மீன்பிடிக் கலன்களுக்கும்.

(3) சமவாயத்தின் V ஆம் அத்தியாயத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்ய்பபட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள்,கேப், டெஸ் றொசியேர்ஸிலிருந்து மேற்குப்புள்ளி, அன்டிகொஸ்ட்டி தீவு மற்றும் அன்டிகொஸ்ட்டி தீவின் வடக்குப் பக்கத்தில், 63 ஆவது உச்சி வட்டம்வரை வரையப்பட்ட, நேர்க்கோட்டொன்றாகக் கிழக்கு வரை வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளிலும் செண்ட் லோறன்ஸ் ஆற்றிலும் மட்டுமே நீர்ப்போக்குவரத்துச் செய்கின்ற இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

3. (1) சர்வதேசப் பயணங்களில் வழமையாக ஈடுபட்டிராததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசப் பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதுமான கப்பலொன்று சமவாயத்தின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் (இவ்வொழுங்குவிதிகளில் ''பணிப்பாளர் தலைமையதிபதி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம்:

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயித்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) (அ) ஒரு புதிய வகையினவான சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள ஏதேனும் கப்பலுக்கு, ஆராய்ச்சிக்காகவும், கப்பல்களில் அத்தகைய சிறப்புக் கூறுகளைச் சேர்ப்பதற்காகவும் சமவாயத்தின் அத்தியாயங்கள் II – 1, II – 2, III மற்றும் IV என்பவற்றின் ஏற்பாடுகளுள் எவற்றிலிருந்தும் பணிப்பாளர் தலைமையதிபதி விலக்களிக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், கப்பலானது எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் அந்தச் சேவைக்காகப் போதியனவாகவுள்ளனவும் கப்பலின் ஒட்டுமொத்தக் காப்பை

உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகவுள்ளனவும் கப்பலானது செல்லவுள்ள அரசுகளின் அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கனவாகவுள்ளனவுமான காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல்கள் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(ஆ) இவ்வொழுங்குவிதியின்கீழ் கப்பலுக்கு விலக்களிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, அதுபற்றிய விபரங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் (இவ்வொழுங்குவிதிகளில் ''ஒழுங்கமைப்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேசக் கடல்சார் ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

## பாகம் II

### ஆய்வுகளும் சான்றிதழ்களும்

4. சமவாயத்தினது ஏற்பாடுகளை வலுவுறுத்துதல் தொடர்பாகக் கப்பல்களின் சோதனையும் ஆய்வும், அலுவலர்களின ஆதரவுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

5. (1) பணிப்பாளர் தலைமையதிபதி உப ஒழுங்குவிதி I இன் நோக்கத்துக்காக, (இவ்வொழுங்குவிதிகளில் "ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் ஒழுங்கமைப்பை, அந்த ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு ஒரு கப்பலுக்கான பழுதுபார்த்தல்களைச் செய்வதற்கும் சோதனைகளையும் ஆய்வுகளையும் நிறைவேற்றுவதற்கும் குறைந்தபட்சத் தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் குறிப்பிட்ட பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பணிப்பாளர் தலைமையதிபதி அந்த ஒழுங்கமைப்புக்கு அறவித்தல் வேண்டும்.

6. (1) கப்பலின் நிலைமை அல்லதுஅதன் சாதனங்கள்,கணிசமானளவில் சான்றிதழின் விபரங்களுக்கு நேரொத்ததாக இராதுள்ளதென அல்லது கப்பலுக்கு அல்லது கப்பலிலுள்ள ஆட்களுக்கு ஆபத்தின்றிக் கப்பலானது கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்ற அத்தகையதாகவுள்ளதென ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு தீர்மானிக்கும்போது, அத்தகைய ஒழுங்கமைப்பானது திருத்த நடவடிக்கை எடுக்கப்படுவதனை உடனடியாக உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் காலப்போக்கில் அறிவித்தலும் வேண்டும்.

(2) அத்தகைய திருத்த நடவடிக்கை எடுக்கப்படாவிடின் இயைபான சான்றிதழ் மீளப்பெறப்படுதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் கப்பலானது வேறொரு திறத்தவரின் துறைமுகத்திலிருப்பின், அத்துறைமுக நாட்டின் தோதான அதிகாரிகளுக்கும் உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) அத்தகையவாறாக இலங்கை நீர்ப்பரப்புகளிலுள்ள ஒரு வெளிநாட்டுக் கலன் தொடர்பாகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிக்கப்படும்போதும், பணிப்பாளர் தலைமையதிபதி, கப்பலுக்கு அல்லது கப்பலிலுள்ள ஆட்களுக்கு ஆபத்தின்றி அக்கப்பலானது கடலுக்குச் செல்லமுடியுமானதாக இருக்கும்வரை அல்லது தோதான பழுதுபார்த்தற் சாலைக்குச் செல்லும் நோக்கத்துக்காகத் துறைமுறைகத்தை விட்டுச் செல்ல முடியுமானதாக இருக்கும்வரை அது கடலிற் செல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7. (1) பயணிக் கப்பலொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள சோதனைகளுக்கும் ஆய்வுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும் :-

(அ) கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துமுன்னரான ஆரம்ப ஆய்வொன்று ;

(ஆ) சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 14(ஆ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பன ஏற்புடையற்பாலனவாக இருக்குமிடத்துத் தவிர, ஒவ்வொரு பன்னிரண்டு மாதங்களுக்கும் ஒரு தடவையான புதுப்பித்தல் ஆய்வொன்று; அத்துடன்

(இ) சந்தர்ப்பம் எழுகின்றவாறாக மேலதிக ஆய்வுகள்.

(2) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஆய்வுகள் சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 7(ஆ) இல் குறித்துரைக்கப்பட்டவாறாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

8. (1) ஐந்நூறு முழு மொத்தச் சரக்கெடையை அல்லது அதற்கு மேற்பட்டதைக் கொண்ட சரக்குக் கப்பலொன்று கீழே குறித்துரைக்கப்பட்ட அதன் உயிர்க்காப்புப் பொருட்களினதும் எனைய சாதனங்களினதும் பின்வரும் ஆய்வுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும் :-

(அ) கப்பலானது சேவையில் ஈடுபடுத்தப்படுமுன்னர் சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்களின் ஆரம்ப ஆய்வொன்று ;

(ஆ) சமாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 14(ஆ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பன ஏற்புடையடற்பாலனவாக இருக்குமிடத்துத்தவிர, ஒவ்வோர் ஐந்தாண்டுகளுக்கும் ஒரு தடவையான சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்களின் புதுப்பித்தல் ஆய்வொன்று ;

(இ) ஒரு சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்கள் பற்றிய சான்றிதழின் இரண்டாவது அல்லது மூன்றாவது ஆண்டு நிறைவுத் தேதிக்கு முன்னரான அல்லது பின்னரான மூன்று மாதங்களினுள், சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்களின் காலாகால ஆய்வொன்று ;

(ஈ) கப்பலின் சரக்குக் காப்புச் சாதனங்கள் பற்றிய சான்றிதழின் ஒவ்வோர் ஆண்டு நிறைவுத் தேதிக்கும் முன்னரான அல்லது பின்னரான மூன்று மாதங்களினுள் காலாகால ஆய்வொன்று நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்துத் தவிர, அக்காலப் பகுதியினுள்ளான வருடாந்த ஆய்வொன்று ; அத்துடன்

(உ) சமவாயத்தினது அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 7(ஆ) (iii) இல் பயணிக் கப்பல்களுக்காக ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான மேலதிக ஆய்வொன்று,

(2) உப ஒழுங்குவிதி (1) இன் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் பகுதிகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆய்வுகள், சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 8(ஆ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி 8 (1) இன் (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலாகால மற்றும் வருடாந்த ஆய்வுகள், சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்கள் பற்றிய சான்றிதழின் மீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9. (1) சமவாயத்தின் அத்தியாயங்கள் III மற்றும் IV எந்தச் சரக்குக் கப்பலுக்கு ஏற்புடையனவாகவுள்ளனவோஅந்தச் சரக்குக் கப்பலொன்று, உயிர்க்காப்புத் துணைப்பொருட்களில் பயன்படுத்தப்பட்டவை உட்பட, அதன் வானொலி நிறுவுகைகளின் பின்வரும் ஆய்வுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும் :-

(அ) கப்பலானது சேவையில் ஈடுபடுத்தப்படுமுன்னர், சரக்குக் கப்பல் வானொலி நிறுவைககளின ஆரம்ப ஆய்வு;

(ஆ) சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 14(ஆ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பன ஏற்புடையற்பாலனவாக இருக்குமிடத்துத் தவிர, ஒவ்வோர் ஐந்தாண்டுகளுக்கும் ஒரு தடவையான சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்களின் புதுப்பித்தல் ஆய்வொன்று;

(இ) கப்பலின் சரக்குக் கப்பல் காப்பு வானொலிச் சான்றிதழின் ஒவ்வோர் ஆண்டு நிறைவுத் திகதிக்கும் முன்னரான அல்லது பின்னரான மூன்று மாதங்களினுள், சரக்குக் கப்பல் வானொலி நிறுவுகையின் காலாகால ஆய்வொன்று ; அத்துடன்

(ஈ) சமவாயத்தினது அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 7(ஆ) (iii) இல் பயணிக் கப்பல்களுக்காக ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான மேலதிக ஆய்வொன்று;

(2) உப ஒழுங்குவிதி (1) இன் பந்திகள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆய்வுகள் சமவாயத்தினது அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 9(ஆ) இல் குறித்துரைக்கப்பட்டவாறாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி 9(1) இன் பந்தி (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலாகால ஆய்வுகள், சரக்குக் கப்பல் காப்பு வானொலிச் சான்றிதழின் மீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

*10. (1) ஐந்நூறு முழு மொத்தச் சரக்கெடையை அல்லது அதற்கு மேற்பட்டதைக் கொண்ட சரக்குக் கப்பலொன்று, ஒழுங்குவிதிகள் 8 மற்றும 9 ஏற்புடையனவாகவுள்ள சாதனங்களைத் தவிர, அதன் கட்டமைப்பு எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்களின் பின்வரும் ஆய்வுகளுக்கும் சோதனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும் :-*

*(அ) கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துமுன்னர், கப்பலின் அடிப்பாகத்தின் வெளிப்புறத்தினது சோதனையொன்றுட்பட, ஆரம்ப ஆய்வொன்று;*

*(ஆ) சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 14 (ஆ), (உ), (ஊ) மற்றும் (எ) என்பன ஏற்புடையனவாகவிருக்குமிடத்துத் தவிர, ஒவ்வோர் ஐந்தாண்டுகளுக்கும் ஒரு தடவையான சரக்குக் கப்பல் காப்பு நிர்மாணப் புதுப்பித்தல் ஆய்வொன்று;*

*(இ) பந்தி (ஈ) இன் குறித்துரைக்கப்பட்ட வருடாந்த ஆய்வுகளுள் ஒன்றிற்குப் பதிலாக நடாத்தப்பட வேண்டியதும் சரக்குக் கப்பல் காப்பு நிர்மாணச் சான்றிதழின் இரண்டாவது அல்லது மூன்றாவது ஆண்டு நிறைவுக்கு முன்னரான அல்லது பின்னரான மூன்று மாதங்களினுள்ளானதுமான சரக்குக் கப்பல் நிர்மாண இடைநிலை ஆய்வொன்று ;*

*(ஈ) கப்பலின் சரக்குக் கப்பல் காப்பு, நிர்மாணச் சான்றிதழின் ஒவ்வோர் ஆண்டு நிறைவுத் தேதிக்கும் முன்னரான அல்லது பின்னரான மூன்று மாதங்களினுள் சரக்குக் கப்பல நிர்மாணப் புதுப்பித்தல் அல்லது இடைநிலை ஆய்வொன்று நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்துத் தவிர, அக்காலப்பகுதியினுள்ளான சரக்குக் கப்பல் நிர்மாண வருடாந்த ஆய்வொன்று ;*

*(உ) ஒழுங்குவிதி 14(5) அல்லது (6) ஏற்புடையதாகவிருக்குமிடத்துத் தவிர, ஏதேனும் ஐந்தாண்டுக் காலப்பகுதியின்போது கப்பலின் அடிப்பாகத்தின் வெளிப்புறத்தினது குறைந்தபட்சம் இரண்டு சோதனைகள் நீருக்கு வெளியே இடம்பெறுதல். ஒழுங்குவிதி 14(5) அல்லது (6) ஏற்புடையற்பாலதாகுமிடத்து,இந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியானது சான்றிதழின் நீடிக்கப்பட்ட செல்லுபடிக் காலப்பகுதியுடன் உடனிகழ்வாகவிருக்கும் வகையில் நீடிக்கப்படலாம். எல்லா விடயங்களிலும் அத்தகைய எவையேனும் இரண்டு சோதனைகளுக்கிடையேயான கால இடைவெளி முப்பத்தாறு மாதங்களை விஞ்சுதலாகாது ; அத்துடன்*

*(ஊ) சமவாயத்தினது அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 7(ஆ) (iii) இல் பயணிக் கப்பல்களுக்காக ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான மேலதிக ஆய்வொன்று.*

*(2) உப ஒழுங்குவிதி (1) இன் பந்திகள் (அ), (ஆ) (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆய்வுகளும் சோதனைகளும், சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 10(ஆ)) இல் குறித்துரைக்கப்பட்டவாறாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

*(3) உப ஒழுங்குவிதி (1) இன் பந்திகள் (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட கப்பலினது வெளிப்புறத்தின் இடைநிலை மற்றும் வருடாந்த ஆய்வுகளும் சோதனைகளும் சரக்குக் கப்பல் காப்பு நிர்மாணச் சான்றிதழின் மீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

*11. (1) இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகவுள்ள ஒவ்வொரு கப்பலினதும் சொந்தக்காரரும் தலைவரும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*(அ) கப்பலுக்கு அல்லது கப்பலிலுள்ள ஆட்களுக்கு ஆபத்தின்றிக் கடலுக்குச் செல்லுவதற்குக் கப்பலானது எல்லா அம்சங்கள் தொடர்பிலும் தகுதியாகவுள்ளதென்பதை உறுதிப்படுத்தும் வகையில் கப்பலினதும் அதன் சாதனங்களினதும் நிலைமை பேணப்படுகின்றமை ;*

*(ஆ) இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட கப்பலின் ஏதேனும் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், ஆய்வினால் மேவப்பட்ட கட்டமைப்புச்சார் ஒழுங்கேற்பாடுகள், எந்திரத்தொகுதி சாதனங்கள் மற்றும் வேறு இனங்களிலான மாற்றமெதுவும் பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரமின்றிச் செய்யப்படுதலாகாதுள்ளமை ;*

*(இ) ஒன்றில் கப்பலொன்றில் காப்பை அல்லதுஅதன் உயிர்காப்புத் துணைப்பொருட்களின் அல்லது வேறு சாதனங்களின் வினைத்திறனை அல்லது பூரணமானதன்மையைப் பாதிக்கின்றதாக அக்கப்பலுக்கு விபத்தொன்று ஏற்படும் போதெல்லாம் அல்லது அதில் குறைபாடொன்று கண்டுபிடிக்கப்படும்போதெல்லாம் –*

*(i) அது மிகக நேரகாலத்துடனான சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றுக்கு அறிவிக்கப்படுகின்றமை ; அத்துடன்*

(ii) அத்தகையவொரு விடயத்தில் இலங்கைக் கப்பலொன்று இலங்கைக்கு வெளியேயுள்ள துறைமுகமொன்றில் இருப்பின், அத்தகைய துறைமுகம் எநத நாட்டில் அமைந்துள்ளதோ அந்த நாட்டின் தோதான அதிகாரிகளுக்கும் அறிக்கையிடப்படுகின்றமை.

12. (1) சமவாயத்தின் அத்தியாயங்கள் I – 1, II - 2, III, IV மற்றும் V என்பவற்றின் இயைபான தேவைபாடுகளுக்கும் சமவாயத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்படுகளுக்கும் இணைங்கியொழுகின்ற பயணிக் கப்பலொன்றுக்கு ஆரம்ப அல்லது புதுப்பித்தல் ஆய்வொன்றுக்குப் பின்னர் பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(2) சமவாயத்தின் அத்தியாயங்கள் II – 1 மற்றும் II - 2 என்பவற்றின் இயைபான தேவைபாடுகளுக்கும் (தீக்காப்பு முறைமைகள் மற்றும் துணைப்பொருட்கள் அத்துடன் தீக்கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தொடர்பானவை நீங்கலாக) சமவாயத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்படுகளுக்கும் இணைங்கியொழுகுகின்ற சரக்குக் கப்பலொன்றுக்கு ஆரம்ப அல்லது புதுப்பித்தல் ஆய்வொன்றுக்குப் பின்னர் சரக்குக் கப்பல் காப்புச் நிர்மாணச் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(3) சமவாயத்தின் அத்தியாயங்கள் II – 1 மற்றும் II – 2, III மற்றும் V என்பவற்றின் இயைபான தேவைபாடுகளுக்கும் சமவாயத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்படுகளுக்கும் இணைங்கியொழுகின்ற சரக்குக் கப்பலொன்றுக்கு ஆரம்ப அல்லது புதுப்பித்தல் ஆய்வுக்குப் பின்னர் சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்கள் மற்றும் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) சமவாயத்தின் அத்தியாயம் IV இன் இயைபான தேவைப்பாடுகளுக்கும் சமவாயத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்படுகளுக்கும் இணைங்கியொழுகின்ற சரக்குக் கப்பலொன்றுக்கு ஆரம்ப அல்லது புதுப்பித்தல் ஆய்வொன்றுக்குப் பின்னர் சரக்குக் கப்பல் வானொலிச் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(5) (அ) உப ஒழுங்குவிதிகள் (2), (3) மற்றும் (4) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழ்களுக்கு மாற்றாக, சமவாயத்தின் அத்தியாயங்கள் II – 1, II - 2, III, IV மற்றும் என்பவற்றின் இயைபான தேவைபாடுகளுக்கும் சமவாயத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்படுகளுக்கும் இணைங்கியொழுகின்ற சரக்குக் கப்பலொன்றுக்கு ஆரம்ப அல்லது புதுப்பித்தல் ஆய்வொன்றுக்குப் பின்னர் சரக்குக் கப்பல் காப்புச் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படலாம்.

(ஆ) இவ்வொழுங்குவிதிகளில் ஒரு சரக்குக் கப்பல் காப்பு நிர்மாணச் சான்றிதழ் சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்கள் பற்றிய சான்றிதழ் அல்லது சரக்குக் கப்பல் காப்பு வானொலிச் சான்றிதழ் என்பன பற்றிக் குறிப்பீடு செய்யப்படுமிடத்தெல்லாம், சரக்குக் கப்பல் காப்புச் சான்றிதழொன்று இச்சான்றிதழகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படி அதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழ், சரக்குக் கப்பல் காப்புச் சான்றிதழ் பற்றிய சான்றிதழ், சரக்குக் கப்பல் காப்பு வானொலிச் சான்றிதழ் மற்றும் சரக்குக் கப்பல் காப்புச் சான்றிதழ் என்பன, சாதனங்கள் பற்றிய பதிவேடொன்றின் மூலம் குறைநிரப்பப்படுதல் வேண்டும்.

(7) (அ) சமவாயத்தின் ஏற்பாடுகளின் கீழும் அவற்றுக்கிணங்க கப்பலொன்றுக்கு விலக்களிப்பொன்று வழங்கப்படும்போது, இவ்வொழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களுடன் சேர்த்து மேலதிகமாக விலக்களிப்புச் சான்றிதழ் எனவழைக்கப்படும் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும். விலக்களிப்புச் சான்றிதழொன்றின் செல்லுபடியான காலப்பகுதியானது, அது எந்தச் சான்றிதழைக் குறிப்பீடு செய்கின்றதோ அந்தச் சான்றிதழின் செல்லுபடியான காலப்பகுதியைவிட நீண்டாகவிருத்தலாகாதென்பதுடன் அது குறிப்பீடு செய்கின்ற சான்றிதழைப்போன்று அதே நீடிப்புக்கும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமைந்ததாதலும் வேண்டும். விலக்களிப்புகளின் வழங்குகையானது பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், நியாயமான அறிவித்தல் கொடுத்தபின்னர், உப ஒழுங்குவிதி (அ) இன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

*(8)* உப ஒழுங்குவிதி (7) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விலக்களிப்புச் சான்றிதழ் தவிர இவ்வொழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யயப்பட்ட சான்றிதழானது, சான்றிதழுக்கான முழுப்பொறுப்பையும் பணிப்பாளர் தலைமையதிபதி பொறுப்பேற்கும் ஒவ்வொரு விடயத்திலும் ஒன்றில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனுமாளினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் வழங்கப்படுதல் அல்லது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

*13. (1)* பணிப்பாளர் தலைமையதிபதியானவர், சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாட்டின் அரசாங்கத்தினது கோரிக்கையின் பேரில், அந்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பலொன்றை ஆய்வுசெய்யலாமென்பதுடன் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகப்படுகின்றதெனத் திருப்திப்படின், பணிப்பாளர் தலைமையதிபதியானவர், *12* ஆம் ஒழுங்கு விதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழ்களை அக்கப்பலுக்கு வழங்குதலும் வேண்டும். அத்துடன் தோதானவிடத்து, சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அத்தகைய சான்றிதழ்களைப் புறக்குறிப்பிடுதலும் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழானது, எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுவதற்குக் கப்பலானது உரித்துடையதாகவுள்ளதோ அல்லது உரித்துடையதாகவிருக்குமோ அந்த அரசின் அரசாங்கத்தினது கோரிக்கையின் பேரில் அது வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் *12* ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்றாற்போன்று அதேவலுவைக் கொண்டிருத்தலும் அதே அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

*(2)* பணிப்பாளர் தலைமையதிபதியானவர், சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாட்டின் அரசாங்கத்தை இலங்கைக் கப்பலொன்றை ஆய்வுசெய்யும்படியும் சமவாயத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படின், சமவாயத்திற்கிணங்க அக்கப்பலுக்குச் சான்றிதழ்களை வழங்கும்படியும் கோரலாம். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், அது இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்றாற்போன்று அதேவலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

*14. (1)* ஒரு பணிக் கப்பல் சான்றிதழொன்று பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காக வழங்கப்படுதல் வேண்டும். ஒரு சரக்குக் கப்பல் காப்பு நிர்மாணச் சான்றிதழ் சரக்குக் கப்பல் காப்புச் சாதனங்கள் பற்றிய சான்றிதழ் மற்றும் சரக்குக் கப்பல் காப்பு வானொலிச் சான்றிதழ் என்பன ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

*(2)* (அ) ஓராம் பந்தியின் தேவைப்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்குமுன்னரான மூன்று மாதங்களினுள் புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்படும் போது, புதிய சான்றிதழானது புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்த பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(i) ஒரு பயணிக் கப்பலுக்காக, ஏலேவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ii) ஒரு சரக்குக் கப்பலுக்காக, ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(ஆ) ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்கு பின்னர் புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(i) ஒரு பயணிக் கப்பலுக்காக, ஏலேவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ii) ஒரு சரக்குக் கப்பலுக்காக, ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(இ) ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்கு முன்னரான மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்படும்போது, புதிய சான்றிதழானது, புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(i) ஒரு பயணிக் கப்பலுக்காக, ஏலேவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ii) ஒரு சரக்குக் கப்பலுக்காக, ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(3) ஒரு பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழ் அல்லாத சான்றிதழொன்று ஐந்தாண்டுகளுக்குக் குறைவானதொரு காலப்பகுதிககாக வழங்கப்படின், பணிப்பாளர் தலைமையதிபதியானவர், முடிவுறும் தேதிக்கப்பால் உப ஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்ட அதிகபட்சக் காலப்பகுதிக்குள் சான்றிதழின் செல்லுபடியாந்தன்மையை நீடிக்கலாம், ஆயின், ஐந்தாண்டுக் காலப்பகுதிக்காகச் சான்றிதழொன்று வழங்கப்படும் போது ஏற்புடையற்பாலவையும் ஒழுங்குவிதிகள் 8, 9 மற்றும் 10 என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான ஆய்வுகள் தோதானவாறாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(4) புதுப்பித்தல்ஆய்வொன்று பூர்த்தி செய்யப்பட்டு ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதிக்கு முன்னர் புதிய சான்றிதழொன்றை வழங்க முடியாதிருப்பின் அல்லது கப்பலில் இடப்படமுடியாதிருப்பின், ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு ஏலவேயுள்ள சான்றிதழைப் புறக்குறிப்பிடலாம் என்பதுடன் அத்தகையவொரு சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்து மாதங்களை விஞ்சாதவொரு மேலதிகக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(5) சான்றிதழொன்று முடிவுறும் நேரத்தில் கப்பலொன்று எந்தத் துறைமுகத்தில் ஆய்வு செய்யப்படவுள்ளதோ அந்தத் துறைமுகமொன்றில் அது இராதிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சான்றிதழின் செல்லுபடிக் காலப்பகுதியை நீடிக்கலாம். ஆனால் இந்நீடிப்பு, கப்பலானது எந்தத் துறைமுகத்தில் ஆய்வு செய்யப்படவுள்ளதோ அந்தத் துறைமுகத்துக்கு அதன் பயணத்தைப் பூர்த்தி செய்வதனை அனுமதிக்கும் நோக்கத்துக்காக மட்டும், அத்துடன் அவ்வாறு செய்வது முறையாகவும் நியாயமானதாகவும் தோன்றுகின்ற விடயங்களில் மட்டும், வழங்கப்படுதல் வேண்டும்.

(6) சான்றிதழெதுவும் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படுதலாகாது என்பதுடன் நீடிப்பொன்று என்பதுடன் எந்தக் கப்பலுக்கு வழங்கப்படுகின்றதோ அந்தக் கப்பலொன்று, அது எந்தத் துறைமுகத்தில் ஆய்வு செய்யப்படவுள்ளதோ அந்தத் துறைமுகத்தை வந்தடைவதன் மீது புதியவொரு சான்றிதழின்றி அத்துறைமுகத்தை விட்டு நீங்குவதற்கு அத்தகைய நீடிப்பின் பயனைக் கொண்டு உரித்துடையதாதலுமாகாது. புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்படும்போது புதிய சான்றிதழானது பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(அ) ஒரு பயணிக் கப்பலுக்காக, நீடிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஏலேவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ஆ) ஒரு சரக்குக் கப்பலுக்காக, நீடிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(7) இவ்வொழுங்குவிதியின் மேற்போந்த ஏற்பாடுகளின் கீழ் நீடிக்கப்பட்டிராததும் குறுகிய பயணங்களில் ஏற்படுகின்ற கப்பலொன்று வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்று, அதில் குறிப்பிடப்பட்ட முடிவுறும் தேதியிலிருந்து ஒரு மாதம் வரையிலான கருணைக்காலப்பகுதிக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நீடிக்கப்படலாம். புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்படும்போது புதிய சான்றிதழானது பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(அ) ஒரு பயணிக் கப்பலுக்காக, நீடிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஏலேவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ஆ) ஒரு சரக்குக் கப்பலுக்காக, நீடிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான விசேட சூழ்நிலைகளில் புதிய சான்றிதழொன்று உப ஒழுங்குவிதி (2) இன் (ஆ) என்னும் பந்தி, உபஒழுங்குவிதி (5) அல்லது (6) என்பவற்றினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஏலவேயுள்ள சான்றிதழானது முடிவுறும் தேதியிலிருந்து தேதியிடப்படுதலாகாது. இந்த விசேட சூழ்நிலைகளில் புதிய சான்றிதழானது பின்வருமாறு செல்லுபடியானதாதல் வேண்டும் :-

(அ) ஒரு பயணிக் கப்பலுக்காக, புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு தேதி வரையும் ;

(ஆ) ஒரு சரக்குக் கப்பலுக்காக, , புதுப்பித்தல் ஆய்வு பூர்த்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு தேதி வரையும்.

(9) இயைபான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் வருடாந்த, இடைநிலை அல்லது காலாகால ஆய்வொன்று பூர்த்தி செய்யப்படின், அப்போது :

(அ) இயைபான சான்றிதழிற் காட்டப்பட்ட ஆண்டு நிறைவுத் தேயானது, ஆய்வானது எத்தேதியன்றுபூர்த்தி செய்யப்பட்டதோ அத்தேதிக்குப் பிந்தாததும் மூன்று மாதங்களுக்கு மேற்படாததாகவிருக்கவேண்டியதுமானவொரு தேதிக்குப் புறக்குறிப்பிடப்படுவதன்மூலம் திருத்தப்படுதல் வேண்டும்:-

(ஆ) இயைபான ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அடுத்துபின்னரான வருடாந்தஇடைநிலை அல்லது காலாகால ஆய்வானது, புதிய ஆண்டு நிறைவுத் தேதியைப் பயன்படுத்தி இவ்வொழுங்குவிதிகளினால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) முடிவுறும் தேதியானது மாறாதிருக்கலாம்;

ஆயின், தோதானவாறாக, இயைபான ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட ஆய்வுகளுக்கிடையேயான அதிகபட்சக் கால இடைவெளிகள் விஞ்சாதிருக்கப்படும் வகையில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த, இடைநிலை அல்லது காலாகால ஆய்வுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(10) ஒழுங்குவிதி 12 அல்லது 13 என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று, பின்வரும் விடயங்களுள் ஏதேனுமொன்றில் செல்லுபடியானதாக இல்லாதொழிதல் வேண்டும்.

(அ) இயைபான ஆய்வுகளும் சோதனைகளும் ஒழுங்குவிதிகள் 7(1), 8(1), 9(1) மற்றும் 10(1) என்பவற்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலாப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படாவிடின்,

(ஆ) சான்றிதழானது சமவாயத்திற்கிணங்கப் புறக்குறிப்பிடாதிருப்பின், அல்லது

(இ) கப்பலை வேறோர் அரசின்கொடிக்கும் கைமாற்றுவதன் மேல்.

(11) உப ஒழுங்குவிதி (9) இன்கீழ் சான்றிதழொன்று செல்லுபடியானதாக இல்லாதொழியுமிடத்து, கப்பலானது ஒழுங்குவிதி 11 (1) இன் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகவுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதியானவர் முழுமையாகத் திருப்திப்படும்போது மட்டுமே புதிய சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும். சமவாயம் எந்த வேறோர் அரசுக்கு ஏற்புடையதாகவிருக்கின்றதோ அந்த வேறோர் அரசுக்கு ஏதேனும் இலங்கைக் கப்பலானது கைமாற்றப்படும் விடயத்தில், கைமாற்றம் இடம்பெற்ற பின்னர் மூன்று மாதங்களினுள் கோரப்படின் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இயன்றளவு விரைவாக கைமாற்றத்துக்கு முன்னர் அக்கப்பலினால் கொண்டு செல்லப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும் கிடைக்கக்கூடியனவாயின், இயைபான ஆய்வறிக்கைகளின் பிரதிகளையும் அவ்வரசின் நிருவாகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

(12) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இலங்கைக் கப்பலொன்றுக்கு வழங்கப்பட்ட சான்றிதழொன்றை,

(அ) அச்சான்றிதழ் பொய்யான அல்லதுபழையான தகவல்களின்மீது வழங்கப்பட்டதெனவும்;

(ஆ) கட்டமைப்பு சாதனங்கள் அல்லது எந்திரத்தொகுதி சேதமடைந்துள்ளதெனவும் அல்லது ஹவேறு வகையில் குறைபாடுடையதாகவுள்ளதெனவும்.

நம்புவதற்குக் காரணமுள்ளவிடத்து, இல்லாதாக்கலாம்.

(13) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், முடிவுற்றதாகவுள்ளதும் அலர்லது இல்லாதாக்கப்பட்டுள்ளதும் இலங்கைக் கப்பலொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதுமான சான்றிதழொன்று ஒப்படைக்கப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(14) ஆளெவரும் -

(அ) இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழொன்றை வேண்டுமென்று மாற்றுதலாகாது;

(ஆ) இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொய்யான சான்றிதழொன்றை வேண்டுமென்று தயாரித்தலாகாது;

(இ) இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆய்வு சம்பந்தமாக, அறிந்துகொண்டு அல்லது கவனயீனமான முறையில் பொய்யான தகவல்களைக் கொடுத்துதவுதலாகாது;

(ஈ) ஏமாற்றும் உட்கருத்துடன், இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழொன்றைப் பயன்படுத்துதலோ, கடனாகக் கொடுத்தலோ அல்லது இன்னொருவரினால் பயன்படுத்தப்படுவதனை அனுமதித்தலோ ஆகாது ; அல்லது

(உ) உப ஒழுங்குவிதி (13) இன்கீழ் ஒப்படைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழொன்றை ஒப்படைப்பதற்குத் தவறுதலாகாது.

15. சான்றிதழ்களும் சாதனங்கள் பற்றிய பதிவேடுகளும் சமவாயத்திற்கான பின்னிணைப்பின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு நேரொத்ததாகவுள்ள படிவத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

16. சமவாயச் சான்றிதழ்கள் வழங்கப்பட்ட ஒவ்வொரு கப்பலினதும் சொந்தக்காரரும் தலைவரும் எல்லா நேரங்களிலும் அவை பரிசோதனைக்காகக் கப்பலில் உடனடியாகக் கிடைக்கக்கூடியமையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

17. சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தநாட்டின் அரசாங்கத்தினது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட சானறிதழ்கள், சமவாயத்தினால் மேவப்பட்ட எல்லா நோக்கங்களுக்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அவர்களினால் வழங்கப்படும் சான்றிதழ்கள் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருப்பனவாக அவை பணிப்பாளர் தலைமையதிபதியினால் கருதப்படுதல் வேண்டும்.

18. (1) ஒரு குறிப்பிட்ட பயணத்தின் போது, இலங்கைக் கப்பலொன்று, பயணிக்கப்பல் காப்புச் சான்றிதழிற் குறிப்பிடப்பட்ட மொத்த எண்ணிக்கையினருக்குக் குறைவான எண்ணிக்கையினரான ஆட்களைக் கப்பலில் கொண்டிருப்பின், அத்துடன் அதன் விளைவாக, சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சான்றிதழிற் குறிப்பிடப்பட்டவற்றைப் பார்க்கிலும் குறைவான எண்ணிக்கையினவான உயிர்க்காப்புப் படகுகளையும் ஏனைய உயிர்காப்புத் துணைப்பொருட்களையும் கொண்டு செல்வதற்குஅது சுதந்திரமுடையதாகவிருப்பின், இலங்கைக் கப்பலொன்றின் விடயத்தில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் அல்லது ஒரு வெளிநாட்டுக் கலனின் விடயத்தில், அக்கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் அலலது அதன்சார்பில் செயலாற்றுகின்ற ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் பின்னிணைப்பொன்று வழங்கப்படலாம்.

(2) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் வழங்கப்பட்ட பின்னிணைப்பானது, சமவாயத்தின் ஏற்பாடுகளினது மீறுகையெதுவும் இல்லையெனக் குறிப்பிடுதல் வேண்டும். அது சான்றிதழுடன் இணைக்கப்படுதல் வேண்டும். அது, குறிப்பிட்ட எந்தப் பயணத்துக்காக வழங்கப்படுகின்றதோ குறிப்பிட்ட அந்தப் பயணத்துக்காக மட்டுமே செல்லுபடியானதாதல் வேண்டும்.

19. (1) பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது 13 ஆம் ஒழங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் செல்லுபடியானவை என்பதைச் சரிபார்க்குமுகமாகக் கட்டுப்பாடானது நெறிப்படுத்தப்படும் அளவுரை, இலங்கையின் துறைமுகமொன்றிலுள்ள வெளிநாட்டுக் கப்பலொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாகவுள்ளது.

(2) அத்தகைய சான்றிதழ்கள் செல்லுபடியானவையாகவிருப்பின், கப்பலின் அல்லது அதன் சாதனங்களின் நிலைமையானது, சான்றிதழ்களுள் எவற்றினதும் விபரங்களக்குக் கணிசமானளவில் நேரொத்ததாக இராதுள்ளதென அல்லது கப்பலும் அதன்

சாதனங்களும் 11 (இ) என்னும் ஒழுங்குவிதியின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக இராதுள்ளனவென நம்புவதற்குத் தெளிவான ஏதுக்கள் இருந்தாலொழிய, ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) இல் கொடுக்கப்பட்ட சூழ்நிலைகளில் அல்லது சான்றிழொன்று முடிவுற்றுள்ளவிடத்து அல்லது செல்லுபடியானதாக இல்லாதொழிந்துள்ளவிடத்து, கட்டுப்பாட்டை நிறைவேற்றும் அலுவலர், அக்கப்பலுக்கு அல்லது அக்கப்பலிலுள்ள ஆட்களுக்கு ஆபத்தின்றி அக்கப்பலானது கடலுக்குச் செல்லமுடியுமானதாக இருக்கும்வரை அல்லது தோதான பழுதுபார்த்தற் சாலைக்குச் செல்லும் நோக்கத்துக்காகத் துறைமுகத்தை விட்டுச்செல்லமுடியுமானதாக இருக்கும்வரை அது கடலிற் செல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் கீழான கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கையில், கப்பலொன்று முறையற்றவகையில் தடுத்துவைக்கப்படுவதனை அல்லது தாமதப்படுத்தப்படுவதனை தவிர்ப்பதற்கு இயன்ற எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுதல் வேண்டும். கப்பலொன்று அதன்மூலம் முறையற்றவகையில் தடுத்துவைக்கப்படின் அல்லது தாமதப்படுத்தப்படின், உறப்பட்ட ஏதேனும் இழப்புக்காக அல்லது சேதத்துக்காக அது நட்டஈட்டுக்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(5) இக்கட்டுப்பாடானது ஏதேனும் வகையினதான இடையீட்டை ஏற்படுத்தும் பட்சத்தில், கட்டுப்பாட்டை நிறைவேற்றும் அலுவலர், இடையீடானது எந்தச் சூழ்நிலைகளில் அவசியமெனக் கருதப்பட்டதோ அந்த எல்லாச் சூழ்நிலைகளும் பற்றி அக்கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையதாகவுள்ளதோ அந்த அரசின் துணைத்தூதருக்கு அல்லது அவர் இல்லாதிருப்பின், மிக்க அண்மையிலுள்ள தூதுவப் பிரதிநிதிக்கு உடனடியாக உழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்துடன் சேர்த்து மேலதிகமாக, சான்றிதழ்களின் வழங்குகைக்குப் பொறுப்பாகவுள்ள பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆய்வாளர்களுக்கும் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும். இடையீடு சம்பந்தமான நிகழ்வுகள் ஒருங்கமைப்புக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(6) உபஒழுங்குவிதி (3) மற்றும் (5) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு செயலாற்றுவதற்குக் கப்பலானது இயலாதிருப்பின் அல்லது கப்பலானது அடுத்த சென்றடையும் துறைமுகத்துக்கு அனுமதிக்கப்பட்டிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (5) இல் குறிப்பிடப்பட்ட திறத்தவர்களுடன் சேர்த்து மேலதிகமாக, அடுத்த சென்றடையும் துறைமுகத்தின் அதிகாரிகளுக்குக் கப்பல் பற்றித் தோதான எல்லாத் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும்.

20. ஏதேனும் கப்பல் தோதான செல்லுபடியானவையாகவுள்ள சான்றிதழ்களை வைத்திருந்தாலொழிய, சமவாயத்தின் சிறப்புரிமைகள் அதன் சார்பில் உரிமைகோரப்படுதலாகாது.

## பாகம் III
## இடைநேர்வுகளும் நானாவித ஏற்பாடுகளும்

21. (1) தற்போதைய ஒழுங்குவிதிகளிலான என்ன மாற்றங்கள் விரும்பத்தக்கனவாக இருக்கக்கூடுமென்பதைத் தீர்மானிப்பதில் ஏதேனும் நுண்ணாய்வு உதவக்கூடுமெனப் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கும்போது, பணிப்பாளர் தலைமையதிபதியானவர், சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய கப்பல்களுள் எவற்றுக்கும் இடம்பெறுகின்ற ஏதேனும் இடைநேர்வுபற்றிய அத்தகைய நுண்ணாய்வொன்றை நடாத்துவதற்குப் பொறுப்பெற்றல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய நுண்ணாய்வுகளின் கண்டுபிடிப்புச் சம்பந்தமான தொடர்புபட்ட தகவல்களை ஒழுங்கமைப்புக்கு வழங்குவதற்குப் பொறுப்பேற்றல் வேண்டும். அத்தகைய தகவல்களின் அடிப்படையின்மேல் ஒழுங்கமைப்பின் அறிக்கைகள் அல்லது விதப்புரைகள் எவையும் சம்பந்தப்பட்ட கப்பல்களின் அடையாளத்தை அல்லது நாட்டினத்தை வெளிவிடுதலாகாது அல்லது ஏதேனும் கப்பலின்மீது அல்லது ஆளின்மீது பொறுப்பை எம்முறையிலும் சுமத்துதலோ அல்லது உட்கிடையாகக் கூறுதலோ ஆகாது.

22. குறிப்பிட்டவொரு பொருத்தி, பொருள், துணைப்பொருள் அல்லது உபகரணம், அல்லது அதன் வகை, ஒரு கப்பலில் பொருத்தப்படுதல் வேண்டும் அல்லது கொண்டு செல்லப்படுதல் வேண்டும், அல்லது குறிப்பிட்ட ஏதேனும் எற்பாடு செய்யப்படுதல் வேண்டும் எனச் சமவாயம் தேவைப்படுத்துமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியானவர், வேறைதேனும் பொருத்தி, பொருள், துணைப்பொருள் அல்லது உபகரணம், அல்லது அதன் வகை, அல்லது ஏற்பாடு சமவாயத்தினால்

தேவைப்படுத்தப்பட்டவாறாகக் குறைந்தபட்சத்திலான பயனைக்கொண்டுள்ளதாக இருக்கின்றதென அதன் பரீட்சிப்புமூலம் அல்லது அதன் வகையை அக்கப்பலில் பொருத்துவதற்கு அல்லது கொண்டுசெல்வதற்கு அல்லது வேறேதேனும் ஏற்பாட்டைச் செய்வதற்கு அனுமதியளிக்கலாம்.

23. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் உள்ளதான ஏதேனும் கப்பல் காப்பற்ற கப்பலொன்றாகவுள்ளதெனக் காணப்படுமிடத்தும், அத்தகைய கப்பலின் உடற்பகுதியின், சாதனங்களின் அல்லது எந்திரத்தொகுதியின் குறைபாடுள்ள நிலைமை, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றுகை அல்லது முறையற்ற சுமையேற்றுகை அல்லது சமவாயத்துடன் ஒத்ததாகவிராத வேறேதேனும் நிலைமை காரணமாக, அத்தகைய கப்பல் எச்சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அச்சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரதூரமான சேதமின்றிக் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவுள்ளவிடத்தும், அத்தகைய கப்பலானது, ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

24. சமவாயத்தின் அத்தியாயம் I இலுள்ள அடிக்குறிப்புக்களும் அத்தகைய அடிக்குறிப்புக்களின்மூலம் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தினதும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினதும் ஏற்பாடுகளின் குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களை வழங்கலாம்.

26. இவ்வொழுங்குவிதிகளில் -

"ஆண்டுநிறைவுத் தேதி" என்பது, இயைபான சான்றிதழ் முடிவுறும் தேதிக்கு நேரொத்ததாகவிருக்கும் ஒவ்வோர் ஆண்டினதும் நாளும் மாதமும் என்று பொருளாகும்;

"சரக்குக் கப்பல்" என்பது, ஒரு பயணிக் கப்பலல்லாத ஏதேனும் கப்பல் என்று பொருளாகும் ;

"பயணிக் கப்பல்" என்பது பன்னிரெண்டுக்கு மேற்பட்ட பயணிகளைக் கொண்டுசெல்கின்ற கப்பலொன்று என்று பொருளாகும்.

EOG 01-0241

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.